# பொள்ளாச்சி நகராட்சி
## 07.01.2019 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட தீர்மானம்

**1307)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் ATSC தியேட்டர் சாலையில் பாலக்காடு ரோடு சந்திப்பு முதுல் செங்குட்டுவன் வீதி முடிவு வரை குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 19.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்: எஸ்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ்,மதுரை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.32% குறைவு |
| 2 | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.12% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.32% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: எஸ்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ், மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண். 1184 நாள். 28.09.2018 –ல் ரூ.4.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.32% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்:எஸ்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ், மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.5540/2018/இ1**

**1308)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கை எண்.34 அறிவிப்பு எண்.14ல் நகராட்சிகளின் அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் தானியங்கு குடிநீர் மையங்கள் (Automatic Vending Centre) மூலம் வழங்கிட அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பொள்ளாச்சி நகராட்சியில் 36 வார்டுகளிலும் தானியங்கும் குடிநீர் மையங்கள்அமைப்பதற்காக நகரமைப்பு பிரிவு மூலம் இடங்கள் கண்டறியப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 36 இடங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அப்பணிகளுக்கான பணி உத்திரவு 11.12.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நகராட்சியின் ஐந்து இடங்களில் தானியங்கும் குடிநீர் மையங்கள் அமைக்கப்பட உள்ளது. அவ்விடங்களுக்கு நிறுவப்படும் தானியங்கி மின் இயந்திரங்கள் இயங்க ஏதுவாக தமிழ்நாடு மின்வாரியத்திலிருந்து மின் இணைப்பு பெற மின் பணிகள் மேற்கொள்வதற்கும், மின்கட்டணத் தொகைகளும் செலுத்த வேண்டியுள்ளது.

**அமைக்க வேண்டிய இடங்கள்:**

1. ரயில்வே நிலையம் எதிரில்
2. வடுகபாளையம் நியாயவிலைக்கடை பின்புறம்
3. வடுகபாளையம் பூங்கா எதிர்புறம்
4. இந்திரா நகர் சர்ச் எதிர்புறம்
5. சுப்பம்மாள் வீதி பூங்கா வளாகம்

இப்பணியினை மேற்கொள்வதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.80இலட்சம் ஆகும். இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண். 5276/2018/இ1**

**1309)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் வார்டு எண்.9 கணபதி கார்டன் குடியிருப்பு பகுதியில் புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டிற்கு 28.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்: எஸ்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ்,மதுரை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.30% குறைவு |
| 2 | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.02% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.30% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: எஸ்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ்,மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. இப்பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.30% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்:எஸ்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ், மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.6310/2018/இ1**

**1310)** பொது சுகாதாரப்பிரிவு வாகன எண். TN41 AH 2032 உள்ள பழுதுகளை சரி செய்ய அதற்கான உத்தேச செலவினம் ரூ.37,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி பணிகளை உடன் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 6506 /2018 /எச்2**

**1311)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.15040/2017இ1 நாள்.28.12.2017–ன்படி பொள்ளாச்சி நகராட்சியில் ஜோதி நகர் பகுதியில் பூங்கா அமைப்பதற்கு CGF/O&M Gap Filling Fund 2017-2018–ல் ரூ.100.00 இலட்சத்திற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.15040/2017/இ1 நாள்.21.06.2018 கடிதப்படி CGF/O&M Gap Filling Fund 2018-19-ல் 270.00 இலட்சமும் நகராட்சியின் பங்குத் தொகையாக ரூ.30.00 இலட்சமும் சேர்த்து ரூ.300.00 இலட்சத்துக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் மேற்படி திட்டங்களின் கீழ் ரூ.400.00 இலட்சத்துக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜோதி நகர் பகுதியில் அமைப்பது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தலைமை பொறியாளர் அவர்களின் நேரடியாக ஆய்வு செய்து பூங்கா அமைப்பது குறித்து தெளிவுரைகள் வழங்கியுள்ளார்கள். பொது மக்களும் பூங்காவில் அமைக்கப்பட வேண்டிய உட்கட்டமைப்பு மற்றும்

பூங்காவில் அமைக்க வேண்டிய வசதிகள் குறித்து கோரிக்கைகள் சமர்ப்பித்துள்ளனர். நகராட்சி நிர்வாக ஆணையர் தலைமை பொறியாளர் அவர்களின் அறிவுரையின் படியும் பொது மக்களின் கோரிக்கைகளையும் ஏற்று ஜோதி நகர் பூங்காவில் நடைபாதைகள், சுற்றுச்சுவர் வாகனம் நிறுத்துமிடம் புல்வெளிகள், தியான மண்டபம், யோகா மண்டபம், நீரூற்றுகள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி கூடம், சிறுவர்கள் செல்லும் ரயில்வண்டி மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த புதுமையான பூங்காவினை அமைக்க வேண்டியுள்ளது.

மேற்காணும் நவீன அம்சங்களுடன் கூடிய பூங்காவினை ஜோதிநகரில் அமைக்க கலந்தாலோசகர் மூலம் வடிவமைப்பு, மதீப்பீடுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்ய வேண்டியுள்ளது எனவே கலந்தாலோசகர் மூலம் மேற்காண் பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகையில் 2% ரூ.8.00 இலட்சம் செலவினம் ஆகும். இச்செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 0033 /2019 /இ1**

1312) பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சி உரக்கிடங்கில் குப்பைகளை அள்ளிக் கொட்டுவதற்கு சாய்வுத் தளம் அமைத்தல் பணிக்கு ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டிற்கு 13.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்.கே.ஆர்.காளிதாஸ் அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவு |
| 2 | திரு. சி. ராமகிருஷ்ணன், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.80% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.கே.ஆர்.காளிதாஸ் அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.16% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.கே.ஆர்.காளிதாஸ் அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் இப்பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 6502 /2018 /இ1**

1313) பொள்ளாச்சி நகராட்சி புதிய அலுவலகக் கட்டிடத்தில் நான்கு தளங்களுக்கும் சென்று வர பொதுமக்கள் மற்றும் நகராட்சி அலுவலர்கள் உபயோகப்படுத்தும் மின் தூக்கி நிறுவப்பட்டு உபயோகத்தில் உள்ளது. மின் தூக்கி (Lift) ஒப்பந்ததாரர் மூலம் நிறுவப்பட்டு ஓராண்டாக ஒப்பந்தததாரர் மூலம் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு ஓராண்டு முடிவுற்றதால் மின் தூக்கி (Lift) தயாரிப்பு நிறுவனமான Johnson நிறுவனத்தின் மூலம் இனிவரும் ஓராண்டிற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஓராண்டிற்கு மின் தூக்கியில் ஏற்படும் இதர பழுதுகளை விளக்குகள், மின்விசிறி மற்றும் மின்கலன் ஆகிய பழுது ஏற்பட்டால் நிவர்த்தி செய்யவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.90000/– ஆகும். மேற்காணும் ஒருாண்டு பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவினத்திற்கும் ஒருாண்டு பராமரிப்பு பணி செய்ய மின் தூக்கி நிறுவனமான

Johnson நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் பணிக்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
3. மேற்காண் பணிக்கு தயாரிப்பு நிறுவனமாக Johnson நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**1314)** பொள்ளாச்சி நகராட்சியின் வடுகபாளையம் பகுதியில் அமையப்பெற்றுள்ள மயானத்தில் நுண் உயிரி உரமாக்கும் மையம் (MICRO COMPOSTING CENTER) அமைத்திடும் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இம்மையம் அமைக்கும் இடத்தினுள் ஏற்கனவே மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த வழித்தடமும் உள்ளது. எனவே மயானத்திற்கு வரும் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே மக்கள் பயன்பாட்டிற்குப் புதிய கான்கீரிட் தளம் அமைத்திட வேண்டியுள்ளது. மேற்காணும் பணிக்கு ரூ. 13.70 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**1315)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஊத்துக்காடு சாலை கிழக்குப்பகுதியில் கழிவு நீர் மற்றும் மழைநீர் செல்ல வடிகால் உள்ளது. இவ்வடிகால் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதாலும், பழுதடைந்தும் உடைந்த நிலையிலுள்ளது. இதனால் வெளியேறும் கழிவு நீர், வெளியேற முடியாமல் ஆங்காங்கே தேங்கி, சுகாதார பிரச்சினைகள் ஏற்படுகிறது. இதனால் அப்பகுதியில் வாழும் பொது மக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்த வடிகாலினை அகற்றிவிட்டு, புதியதாக வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க வேண்டியுள்ளது.

எனவே, மேற்காணும் பகுதியில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.17.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 0031 /2019 /இ1**

**1316)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9 அண்ணாநகர் மெயின் ரோட்டில் ஏற்கனவே இருந்த சாலையின் அகலத்திற்கேற்ப சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பாலம் அமைக்கப்பட்டு பல வருடங்களுக்கு மேல் ஆனது ஆகும். தற்போது சாலையின் அகலம் அதிகமானதால் இப்பாலம் குறுகி இருப்பதோடு, வாகன போக்குவரத்து நெருக்கடி மற்றும் விபத்துகளும் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு சிறுபாலத்தின் நீளத்தினை அதிகப்படுத்த வேண்டியுள்ளது.

எனவே மேற்காணும் பகுதியில் புதியதாக சிறுபாலம் அமைக்க ரூ.1.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 0032 /2019 /இ1**

**1317)** பொள்ளாச்சிந கராட்சி எல்லைக்குட்பட்ட உடுமலை சாலையில் தேர்நிலை மார்க்கெட் பின்புறம் பகுதியிலுள்ள சாலையில் மார்க்கெட்டிற்கு வந்து செல்வதற்காக Precast Slab அமைக்கப்பட்டுள்ளது. இது அமைக்கப்பட்டு கல வருடங்கள் ஆனதால் சிலாப்புகள் உடைந்த நிலையிலுள்ளது. அதனால் இதில் பயணிக்கும் பொது மக்கள் மற்றும் வயது முதிர்ந்தோர்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள் பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்த மற்றும் உடைந்த சிலாப்புகளை அகற்றிவிட்டு புதியதாக கான்கீரிட் தளம் அமைக்கலாம்.

எனவே மேற்படி பகுதியில் வடிகாலுடன் கூடிய கான்கீரிட் தளம் அமைக்க ரூ.**3.90** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 0039 /2019 /இ1**

**1318)** நகராட்சிக்குச் சொந்தமான காந்தி வாரச்சந்தை வளாகத்தில் மாட்டுச் சந்தை வளாகம் செயல்பட்டு வருகிறது. இவ்வளாகத்தில் வாரந்தோறும் இரண்டு தினங்கள் வியாபாரம் நடைபெறும். அப்பொழுது இரவில் ஏலத்திற்கு வரும் மாடுகளை வண்டியிலிருந்து இறக்கவும். மற்றும் ஏலம் போன மாடுகளை வண்டியில் ஏற்ற வேண்டி நிலை ஏற்படுகிறது. இப்பணிகள்யாவும் இரவிலே செய்ய வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய மின் வெளிச்சம் இல்லாத காரணத்தினால் பணிபுரியும் பணியாளர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். வண்டியில் மாடுகளை ஏற்றும் பணி மற்றும் இறக்கும் பணிகள் யாவும் 5தாமதமாக நடைபெறும் சூழ்நிலை ஏற்படுவதோடு, போக்குவரத்து நெருக்கடிகளும் ஏற்படுகிறது.

இதனைத் தவிர்க்கும் பொருட்டு வளாகத்தின் நான்கு முக்கிய இடங்களில் மின் கோபுர விளக்குகள் அமைக்க வேண்டியுள்ளது.

மேலும் வளாகத்திற்கு தேவையான தண்ணீர் வசதியை பூர்த்தி செய்யும் விதமாக, வளாகத்திலுள்ள ஆழ்குழாய் கிணற்றை, சுத்தம் செய்து, புதியதாக மின் மோட்டார் பொருத்துதல் பணியையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே மேற்காணும் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ரூ.**3.65** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**1319)** பொள்ளாச்சி நகராட்சியின் அண்ணா பழைய பேருந்து நிலையத்தின் மேற்கூரையில் அமைந்துள்ள தடுப்புச்சுவற்றின் மீது பாரம் அதிகமுள்ள விளம்பர பதாகைகள் மற்றும் கடைகளின் பெயர் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் பாரம் தாங்காது சுவர்களில் விரிசல் ஏற்பட்டும் பொதுமக்களுக்கு மிகவும் அச்சுறுத்தலாகவும் உடைந்து விழும் அபாயநிலையில் உள்ளது. எனவே விரிசல் விட்டுள்ள தடுப்புச்சுவர்களை அகற்றிவிட்டு புதிய சுவர்கள் கட்டிவிடவும் மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.**2.20** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 6707 /2018 /இ1**

**1320)** நகராட்சிக்குச் சொந்தமான C.T.C மேடு அண்ணா நகரில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மையம் செயல்பட்டு வருகிறது. இக்குழந்தைகள் நல மையம் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதால் பழுதடைந்தும், மோசமான நிலையிலுள்ளது. இதனால் மையத்திற்கு வரும் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகிறது. குழந்தைகள் நலன் கருதி மேற்கூரை, பக்கச்சுவர்கள் ஆகியவற்றில் மராமத்துப்பணி மேற்கொள்ளவும் மற்றும் மையத்தினை புதுப்பிக்கவும் ரூ.**3.70** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்ட்டினை கல்வி நிதியால் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**1321)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கை எண்.**34.** அறிவிப்பு எண்.**14** ல் நகராட்சிகளின் அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக்குறைந்த விலையில் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centre) மூலம் வழங்கிட அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பொள்ளாச்சி நகராட்சியில் 36 வார்டுகளிலும் தானியங்கும் குடிநீர் மையங்கள் அமைப்பதற்காக நகரமைப்பு பிரிவு மூலம் இடங்கள் கண்டறிப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 36 இடங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அப்பணிகளுக்கான பணி உத்திரவு 11.12.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நகராட்சியின் ஐந்து இடங்களில் தானியங்கும் குடிநீர் மையங்கள் அமைக்கப்பட்ட உள்ளது. அவ்விடங்களுக்கு கிணற்று நீர் அல்லது ஆழ் துளை கிணற்று நீர் கொண்டு செல்வதற்காக புதிய பைப் லைன்கள் அமைக்க வேண்டியுள்ளது.

**அமைக்க வேண்டிய இடங்கள்**

1. ரயில்வே நிலையம்ள உதிரில்
2. வடுகபாளையம் நியாய விலைக்கடை பின்புறம்
3. வடுகபாளையம் பூங்கா எதிர்புறம்
4. இந்திரா நகர் சர்ச் எதிர்புறம்
5. சுப்பம்மான் வீதி பூங்கா வளாகம்

இப்பணியினை மேற்கொள்வதற்காகன உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது—

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 6706 /2018 /இ1**

**1322)** நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.33ல் உள்ள பெரியார் நகர் தெற்கு பகுதியில் உள்ள குடிநீர் குழாய் மற்றும் கிணற்று நீர் குழாய் பதிக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. அவை பழுதடைந்து பழுதகற்ற இயலாத காரணத்தினால் மேற்படி குழாய்களுக்கு பதிலாக புதிதாக P.V.C. குழாய்கள் அமைக்க வேண்டியது அவசியமானதாக உள்ள காரணத்தினால் அவற்றை புதுப்பித்து அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,35,000/— இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**1323)** நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.7 பகுதியில் உள்ள மகாலிங்கபுரம் மெயின் சாலை மற்றும் பல்லடம் மெயின் சாலை சந்திப்பில் நெடுஞ்சாலை துறையினரால் சாலையை அகலப்படுத்தி அமைக்கும் பணி துவங்கப்பட உள்ளதால் அப்பகுதியில் உள்ள மகாலிங்கபுரம் உயர்மட்ட நீர்தேக்க தொட்டியிலிருந்து கோட்டாம்பட்டி ரத்தினம் நகர் முல்லை நகர் மற்றும் மெயின் சாலை ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் மெயின் குழாயின் சூலிஸ் வாழ்வு குழி உள்ளது. அது மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளதால் அதனை புதுப்பித்துக் கட்டுவதற்கும், நால்வர் மடம் சந்திப்பில் உள்ள அண்ணாநகர் கழிப்பிடம் மற்றும் முல்லை நகர் பார்க் ஆகிய இடங்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படும் ஆழ்குழாய் கிணறும் உள்ளது. அப்பகுதியில் வாகனங்கள் சென்றுவர ஏதுவாக ஆழ்குழாய் கிணற்றுக்கு Champer குழி அமைத்து அதன் மீது சிமெண்ட் சிலேப் கற்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச தொகை ரூ.1,60,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**1324)** பொள்ளாச்சி நகராட்சியின் வடுகபாளையத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் நகர் பகுதியில் நியாய விலைக் கடை அமையப் பெற்றுள்ளது. கடையினைச் சுற்றி போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினால் அங்கு சமூக விரோத செயல்கள் நடைபெற்று வருகிறது. மேலும் பொதுமக்கள் மிகவும் அச்சுறுத்தலுடன் செல்ல வேண்டிய சூழல் உள்ளது. எனவே நியாய விலைக் கடையினை சுற்றியப் பகுதியில் மூன்று LED விளக்குகள் அமைத்திட வேண்டியுள்ளது. மேற்காணும் பணிக்கு ரூ. 0.45 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

1325) பொள்ளாச்சி நகராட்சியின் காந்தி வாரச்சந்தைப் பகுதியின் முன்புற தென்வடல் சாலையில் புதிய தார்சாலை அமைக்கப்பட உள்ளது. எனவே பல ஆண்டுகளாக சாலை முழுவதும் இருபுறமும் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்த கடைகள் அனைத்தும் அகற்றப்பட்டு வருகிறது. அதே சாலையில் மீன்கரை சாலை சந்திப்பில் நகராட்சிக்கு சொந்தமான பொதுகழிப்பிடமும் உள்ளது. சாலை விரிவாக்கப் பணிக்காக அக்கழிப்பிடமும் அகற்றப்பட வேண்டியுள்ளது. எனவே அக்கழிப்பிடத்தினை அகற்றிடவும் மேலும் சந்தைப் பகுதியிலேயே புதிய கழிப்பிடம் கட்டுவதற்குமான உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.8.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

1326) பொள்ளாச்சி நகராட்சியின் வார்டு 17ல் உள்ள பகுதிகளில் 05.12.2018 அன்று சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது எஸ்வி நாயுடு வீதியில் அமையப் பெற்றுள்ள கழிவு நீர் சந்து அவரால் பார்வையிடப்பட்டு, மிகவும் சேதமடைந்து இருந்த அப்பகுதியில் புதிய மழைநீர் வடிகால் அமைத்திட அறிவுறுத்தப்பட்டது. அப்பகுதியில் புதிய மழைநீர் அமைப்பதற்கான உத்தேச ரூ. 2.20 இலட்சத்திக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 0036 /2018 /இ1**

1327) பொள்ளாச்சி நகராட்சியின் வார்டு 17ல் உள்ள பகுதிகளில் 05.12.2018 அன்று சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது மாரியப்பன் வீதியில் அமையப் பெற்றுள்ள கழிவு நீர் சந்து பார்வையிடப்பட்டு, மிகவும் சேதமடைந்து இருந்த அப்பகுதியில் புதிய மழைநீர் வடிகால் அமைத்திட அறிவுறுத்தப்பட்டது. அப்பகுதியில் புதிய மழைநீர் அமைப்பதற்கான உத்தேச ரூ. 2.00 இலட்சத்திக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 0037 /2018 /இ1**

1328) நகராட்சிக்குச் சொந்தமான டி.கோட்டாம்பட்டியில் நகர்மன்ற பள்ளி செயல்பட்டு வருகிறது. இவ்வளாகத்தில் கிழக்கு மற்றும் மேற்குப் பார்த்த கட்டிடங்கள் உள்ளன. இதில் மேற்குப் பார்த்த கட்டிடம் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதால் பழுதடைந்தும் மற்றும் பொழுவு இல்லாமல் உள்ளது மேலும் மேற்கூரை அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆனதால் பெயர்ந்தும் உடைந்து நிலையில் உட்ளளது. மழைக்காலங்களில் பெய்யும் மழைநீர் வகுப்பறைகளுக்குள் பக்கச்சுவர்கள் வழியாக உள்ளே விழுகிறது. இதனால் பயிலும் பள்ளி மாணவ மாணவியர்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.

பயிலும் மாணவ மாணவியர்கள் நலன் கருதி கட்டிடத்தினை மராமத்துப் பணி மேற்கொண்டு புதுப்பிக்க வேண்டியுள்ளது.

எனவே மேற்காணும் கட்டிடத்தினை மராமத்துப் பணி மேற்கொண்டு புதுப்பிக்க ரூ.3.40 இலட்சத்த்தற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் மதிப்பீட்டினை கல்வி நிதியால் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

1329) பொள்ளாச்சி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடம் இயங்கிக்கொண்டு வருகிறது. 10.12.2018 அன்று இக்கழிப்பிடத்தில் பொருத்தப்பட்டிருந்த மேல்நிலைத் தொட்டி Sintexல் உடைப்பு ஏற்பட்டது. அதனால் கழிப்பிடத்திற்கு தண்ணீர் விநியோகம் செய்திட இயலாத சூழ்நிலை உள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே புதிய சின்டெக்ஸ் 5000 லிட்டர் பொருத்துவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.60000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

இப்பணியினை போர்கால அடிப்படையில் உடனடியாக செய்து பொதுமக்களின் நலன் பாதுகாக்க வேண்டியிருப்பதால் இப்பணியை தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ல் பகுதி 15 ன் கீழ் செய்ய 11.12.2018 ல் தனி அலுவலரிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது. நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: கே.ஆர்.காளிதாஸ்அன் கோ, அவர்கள் மூலம் மதிப்பீடு விலை விகிதத்தில் பணியை செய்ய அனுமதி பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணி செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

1330) பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு 17ல் உள்ள ராஜாமில் ரோடு பகுதியில் அமைந்துள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் செல்லவும் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, இந்த சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதிதாக அமைத்திட உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.2.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குரிய மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண். 0419 /2019 /இ1**

1331) பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் Steam Boiler பழுதடைந்து பார்வையிடப்பட்டது. அதன் தயாரிப்பு நிறுவனத்தினை வரவழைத்து கழற்றி பார்க்கும்போது அவை துருப்பிடித்து ஒட்டையாகி பழுதகற்ற இயலாத நிலையில் உள்ளது என தெரித்துள்ளார்கள். எனவே அதனை புதுப்பித்து அமைக்க அனுமதியும் உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து தினந்தோரும் சமையல் பணி தடைப்படாமல் இருக்க வேண்டியது அவசியமாக இருப்பதால் இப்பணியை நகராட்சிகளின் சட்டம் 1920–ன் பகுதி 15ன் கீழ் செய்யவும் 19.12.2018–ல் தனி அலுவலரின் அனுமதி பெறப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்காண் பணியை உடனடியாக செய்து முடிக்க 20.12.2018–ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.209863/– க்கு இப்பணியை செய்து கொடுக்க குறைவானதாக விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.சந்திரன் எக்யூப்மென்ட்ஸ், நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்று இந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920– பிரிவு 15–ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

1332) நகராட்சிக்கு சொந்தமான மரப்பேட்டை பகுதிகளில் உள்ள கந்தசாமி பூங்காவில், பூங்காவிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, இருக்கை வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுவதால் பொதுமக்களிடமிருந்து மேற்படி வசதிகளை செய்து கொடுக்க வேண்டி புகார்கள் வந்து கொண்டே இருக்கிறது. அதனால் மேற்படி பூங்காவை பார்வையிட்ட நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுரைப்படி மேற்படி

வசதிகளை செய்துக் கொடுக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10.50 இலட்சத்திக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**1333)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான TN41E0192 தெரு விளக்கு பராமரிப்பு வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளது வாகனத்தில் பழுதுகளை சரி செய்து தரும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 19.12.2018 அன்ற வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1.M/s.P.B. ஷெரிப் ஆட்டோ டிசல் ஒர்க்ஸ், பொள்ளாச்சி. | ரூ.76700/– |
| 2.M/s.J.D&Co, பொள்ளாச்சி | ரூ.73000/– |

**அலுவலகக்குறிப்பு:**

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.J.D&Co, பொள்ளாச்சி நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 5854 /2018 /இ2**

**1334)** பொள்ளாச்சி நகராட்சி அலுவலக பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN41M1616 வாகனம் தகுதி சான்றிதழ் வட்டார போக்குவரத்து துறையில் பெற வேண்டியுள்ளது. இதற்கான பழுது பணிகள், பெயிண்ட் மற்றும் டயர்கள் புதுப்பிக்க தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையாளற்கான M/s.CAI இண்டஸ்ட்ரி, பி.லிட் பொள்ளாச்சி நிறுவனத்தில் மேற்கொள்வதற்கும், இதற்கான உத்தேச செலவீனம் ரூ.1,40,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 6159 /2018 /இ2**

**1335)** பொள்ளாச்சி நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19–ன் கீழ் Reclamation of Existing Dumped yard located at Nallur Compost yard by Removing the Legacy Waste of 95700cu.m in Pollachi Municipality பணிக்கு ரூ.630.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்:**22866/P3/2018** நாள்.23.08.2018–ல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 04.10.2018–ல் முதல் அழைப்பாக இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டும் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதால் மேற்காண் ஒப்பந்தப்புள்ளிகளின் விலை ஒப்பந்தப்புள்ளிகள் 25.10.2018–ல் திறக்கப்பட்டு அவைகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. Shree Bommu Industries, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.69% அதிகம் |
| 2. | M/s. Green Fine Equipments, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.95% அதிகம். |

இவற்றில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.69% அதிகமாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Shree Bommu Industries, Coimbatore அவர்களிடம் 17.10.2018 அன்று விலை குறைப்பு கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது விலை குறைப்பு கடிதத்தில் விலை விகித ஒப்பந்தப்புள்ளியில் விலை குறைப்பு செய்து சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன் படி ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் இவரது ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்பு செய்தும் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.79% அதிகமானதாக உள்ளது.

எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.79% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Shree Bommu Industries, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.79% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Shree Bommu Industries, Coimbatore அவர்கள் டீசல் விலை உயர்வு, வாகன வாடகை மற்றும் ஆட்கள்கூலி உயர்வு போன்ற காரணங்களால் ஒப்பந்தப்புள்ளியில் இதற்கு மேலும் விலை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

இப்பணி திட்டப்பணியாக இருப்பதாலும், குறித்த காலத்திற்குள் பணிகள் முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்ததாரர் M/s.Shree Bommu Industries, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 3106 /2018 /இ2**

**1336)** பொள்ளாச்சி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.109.62 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்பு, வணிகப் பயன்பாடு மற்றும் அரசு கட்டிடங்கள் என மொத்தம் 24962 வரிவிதிப்புகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 20000 கட்டிடங்கள் உள்ளதென கணக்கிட்டு, 20000 வீட்டுக் கழிவு நீர் குழாய் இணைப்புகள் (Internal Plumbing) வழங்க ரூ.13.62 கோடி மதிப்பீட்டில் TUFIDCO நிறுவனத்தின் மூலம் தொகை கடனாகப் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் கடந்த 29.10.2017 அன்று, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டப் பேரவை துணை சபாநாயகர், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர், நகராட்சி நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர், பொள்ளாச்சி சார் ஆட்சியர், பொறியியல் இயக்குநர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியோர் கலந்து கொண்ட பாதாள சாக்கடை பணிகள் முன்னேற்றம் குறித்து நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில், நகராட்சிக்குட்பட்ட அனைத்து விரிவுப் பகுதி மற்றும் வீதிகளுக்கு விடுதலின்றி பாதாள சாக்கடை வீட்டுக் குழாய் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி, ஏற்கனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்பட உள்ள 16050 இணைப்புகள் போக மீதிமுள்ள 3950 எண்ணிக்கை விட்டுக் குழாய் இணைப்புகளுக்கு (வெளிப்புறம்) உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.220.41 லட்சம் செலவாகும் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மேற்காண் வீட்டுக் கழிவு நீர் குழாய் இணைப்பு பணிகளை மேற்கொள்ள தேவையான நிதி ரூ.220.41 லட்சத்தை மானியமாக பெற்றுத் தர நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 6364 /2018 /இ2**

**1337)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான காந்தி சந்தையில் மாற்றி அமைக்கப்பட்ட மாட்டுச்சந்தை பகுதிக்கு புதிய தெருவிளக்கு மின் இணைப்பு ஆணையாளர் பெயரில் பெறவும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு கட்டணமாக ரூ.1609/– யை செலுத்தவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3878 /2018 /இ2**

**1338)** பொள்ளாச்சி நகராட்சிப் பகுதியில் 08.08.2018 முதல் தொடர்ந்து கன மழை பெய்து வருவதால் நகராட்சியின் பகுதிகளில் மழைநீர் சாலைகளில் தேங்கியும், குடியிருப்புகளில் புகுந்தும் சாலைகளில் தேங்கி நின்றும் விடுவதால் பொதுமக்கள், போக்குவரத்திற்கும் வீடுகளில் தங்குவதற்கும் மிகவும்

அவதிக்கு உள்ளாகிறார்கள். மேலும் சாலையில் உள்ள மழைநீர் வடிகால் மீது கடைக்காரர்கள் ஆக்கிரமிப்பு செய்து உள்ளதால் மழைநீர் வடிகால் அடைப்பு ஏற்படுவதை சரி செய்ய இயலாத காரணத்தினாலும், ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டி உள்ளது. நகராட்சியில் ஒரே ஒரு JCB வாகனம் உள்ளது. அது போதாதாக உள்ளதால் மேலும் நான்கு JCB இயந்திரங்கள் வைத்து பணிகளை போர்க்கால அடிப்படையில் அரிதாக செய்து பொதுமக்கள் நலன் பாதுகாக்க வேண்டி உள்ளது. நான்கு JCB வாகனம் வைத்து பணியை செய்யவும். பள்ளி வளாகங்கள் மற்றும் சாலையில் மிகவும் தாழ்வான பகுதிகளுக்கு GSB சாலை அமைத்து நடைபாதைகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் ஆகும் உத்தேச செலவு ரூ.65,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

மேலும், இப்பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக செய்து பொதுமக்களின் நலன் பாதுகாக்க வேண்டி பணியை உடன் செய்ய வேண்டி இருப்பதால் இப்பணியை வெள்ள நிவாரண பணியாக நகராட்சிகளின் சட்டம் 1920–ல் பகுதி 15–ன் கீழ் செய்ய 10.08.2018ல் ஆணையர் மற்றும் தனி அலுவலரின் அனுமதி பெறப்பட்டு அதன் அடிப்படையில் மேற்காண் பணியை உடனடியாக செய்து முடிக்க உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டது. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒரு மணிக்கு ரூ.850/– க்கு செய்து கொடுக்க குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணிகள் முடிவுற்றுள்ளது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920– பிரிவு–15 ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை முடிக்க மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**1339)** வார்டு எண்.11–ல் மரப்பேட்டை பள்ளம் விநாயகர் கோவில் அருகில் உள்ள சிமெண்ட் கான்கீரிட் பைப் சிறுபாலம் பழுதடைந்து சாக்கடை நீர் தேங்கி நிற்பதோடு போக்குவரத்திற்கும் இடையூராக இருக்கின்றது. மேலும் அப்பகுதியில் பிரதான மழைநீர் வடிகால் கால்வாய் அமைந்துள்ளதாலும் அப்பகுதியில் தொடர்ந்து சேதம் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் அப்பகுதியை பாதுகாப்பதற்காக மேற்படி சிறுபாலத்தை புதுப்பித்து கட்டுமாறு நகராட்சி ஆணையர் 05.09.2018 அன்று அப்பகுதியை ஆய்வு செய்த போது உடனடியாக கட்டுவதற்கு அறிவுரை வழங்கினார் அதன்படி அப்பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

பொதுமக்கள் நலன் கருதி இப்பணி உடனடியாக செய்வதற்கு இப்பணியை நகராட்சிகளின் சட்டம் 1920–ன் கீழ் பகுதி 15–ல் செய்யவும் அனுமதி பெறப்பட்டு அதன்படி இப்பணியின் அவசியம் கருதி உடனே பணிகள் மேற்கொள்ள 06.09.2018ல் தனி அலுவலரிடம் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்கள் மூலம் மதிப்பீடு விகிதத்தில் பணியை செய்ய அனுமதி பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920–பிரிவு–15ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகள் செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகள் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**1340)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்களது கட்டிடத்திற்கு பொள்ளாச்சி நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, காலியிட வரி, தொழில்வரி, தண்ணீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களுக்கான நிலுவை மற்றும் நடப்பு 2018–2019 ஆம் ஆண்டிற்கான தொகையை உடனடியாக செலுத்தக் கோரிய அறிவிப்பை ஆட்டோவில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது.

மேற்படி பணியினை 17.12.2018 முதல் 15.01.2018 வரை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை உட்பட அனைத்து நாட்களிலும் விளம்பரம் செய்ய வேண்டியுள்ளதால் வசூல் பணியினை தீவிரப்படுத்தும் பொருட்டு அவசரம் அவசியம் கருதி உள்ளூர் ஆட்டோ ஓட்டுனர்களிடம் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கும் ஆட்டோ ஓட்டுனருக்கு வேலை உத்திரவு வழங்கிடவும் அதற்காக

மேற்கொள்ளப்படும் உத்தேச செலவினம் ரூ. ஒரு இலட்சம் மட்டும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 142 /2013 /அ2**

1341) நகராட்சிக்கு சொந்தமான காந்தி வாரச் சந்தைப் பகுதியில் 'சி' பிளாக் கட்டணக் கழிப்பிடத்திற்கு அருகில் 15X10 அளவுள்ள காலி இடத்தின் குத்தகைதாரர் திரு. ஜெய்னுலயுதீன் என்பவரால் இவ்வலுவலக ந.க.எண். அ6/5674/18, நாள் 11.12.2018ந் தேதிய அறிவிப்பை தடை செய்ய கோரி W.P 34319 / 2018 என்ற எண்ணில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் (திரு.ந.ஆனந்த்) அதற்காகும் அனைத்து செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இவ்வலுவலக ந.க.எண்.அ6/5674/2018 போக்குவரத்து மற்றும் பொது மக்கள் நலன் கருதி சந்தை சாலையின் நுழைவு பகுதியின் ஓரத்தில் உள்ள கழிப்பிடமும் அதனை ஒட்டி உள்ள காலி இடமும் சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படுவதால் காலி இடத்தை மூன்று தினங்களுக்குள்ஒப்படை செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டதை ஆட்சேபித்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

**ந.க.எண். 6682 /2018 /அ6**

1342) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித எண். ந.க.எண்.27547/2018/உவ நாள் 25.10.18ன்படி தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்களுக்கு சுகாதாரப் பணியினை செவ்வனே செய்தல் குறித்த 2 நாள் பயிற்சி நடத்த தெரிவிக்கப்பட்டது. மேலும் 6.12.2018 தேதிய கடிதத்தில் பொள்ளாச்சி மற்றும் வால்பாறை நகராட்சி பணியாளர்களுக்கு 12.12.2018 to 13.12.2018 மற்றும் 14.12.2018 to 15.12.2018 ஆகிய நாட்களில் இரண்டு குழுக்களாக பயிற்சி நடத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அவர்களுக்கு தங்குமிடம், உணவு, தேநீர், ஸ்நாக்ஸ் மற்றும் பயிற்சி செலவுகளுக்காக ரூ.1,00,000/– முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக பயிற்சி வல்லுநர் அவர்களுடன் நடந்த ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டபடி பயிற்சியில் பங்கேற்க அனைவருக்கும் சிறப்பான மதிய உணவு வழங்கப்பட்டது. இரண்டு குழுக்களுக்கும் பயிற்சி நடத்த மொத்த செலவினம் ரூ.1,11,474/– செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் இருந்து பெறப்பட்ட தொகை ரூ.1,00,000/– மற்றும் கூடுதல் செலவினம் ரூ.11,474/– ஆக மொத்தம் ரூ.1,11,474/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட செலவின நடவடிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 5746 /2018 /எச்1**

1343) பொள்ளாச்சி நகராம், கோட்டூர் சாலையில் உள்ள நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி சுற்றுச் சுவற்றில் ஓவியங்கள் மற்றும் பழமொழிகள் வரைய அனுமதி கோரி மனுதாரர் திரு. A. ரஞ்சித்குமார், துணை மேலாளர், ஓசோன் செக்யூரிட்டி டெக், டெல்லி அவர்களின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் ஓவியங்கள் மற்றும் பழமொழிகள் வரைய அனுமதி வழங்கலாம்.

1. ஓவியங்கள் வரையப்படும்போது நகராட்சி சொத்துக்கு சேதாரம் ஏதும் ஏற்படக்கூடாது.
2. நகராட்சி அதிகாரிகள் மேற்பார்வையில் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. நகராட்சி மூலம் செலவினம் மற்றும் இழப்பீடு ஏதும் வழங்கப்படமாட்டாது.
4. ஜாதி மற்றும் மதம் தொடர்பான ஓவியங்கள் அல்லது வார்த்தைகள் இருக்கக்கூடாது.
5. அரசு திட்டங்களை கேலி செய்யும் வகையில் ஓவியங்கள் அல்லது வார்த்தைகள் இருக்கக் கூடாது.

**ந.க.எண். 5 /2019 /ஜி3**

1344) பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களுக்கு 2019ம் ஆண்டுக்கான (11 வாகனங்களுக்கு) வாகன காப்பீட்டு கட்டணம் உத்தேச செலவினம் ரூ.6,00,000/–ம், வட்டார போக்குவரத்து தகுதிச்சான்று பெற ரூ.2,00,000/–ம் சாலை வரி, பசுமை வரி செலுத்த ரூ.3,00,000/–ம் மொத்த உத்தேச செலவின தொகை ரூ.11,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் முன்னிட்டு பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 6712 /2018 /எச்2**

1345) பொள்ளாச்சி நகராட்சியின் குடிநீர் விநியோகத்தில் மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 215HP HSC Unit I ல் மின் மோட்டார் இயக்கத்திற்கான Main Switch 400 A mccb யின் உட்பாகங்கள் தேய்மானம் அடைந்து பழுதடைந்து உள்ளது. இதனால் மின் மோட்டார் இயக்கம் தடைபட்டுள்ளது. எனவே பழுதடைந்துள்ள 400A mccb யினை புதிதாக மாற்றி அமைத்துக் கொள்ளவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.75, 000/-க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

1346) இந்நகராட்சியின் 36 வார்டு பகுதியின் பொதுமக்களுக்கு வரி செலுத்த, சுகாதாரம் மற்றும் நலம்பேண, திடக்கழிவு மேலாண்மை மற்றும் விழிப்புணர்வு அறிவிப்புகளை நகராட்சியின் அவ்வப்போது மேற்கொள்ள ஏதுவாக, நகராட்சியின் 10 வாகனங்களுக்கு ஒலி பெருக்கி வசதியினை அமைக்க வேண்டியுள்ளது. இதனால் நகராட்சியின் வருவாயினை துரிதமாக வசூலிக்கவும், மக்கள் நலனை பாதுகாத்திடவும் இயலும் பொருட்டு, நகராட்சியின் 10 வாகனங்களில் புதிய ஒலி பெருக்கி வசதியினை அமைத்திடவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்

1347) பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்திற்கு 01.10.2018 முதல் 31.03.2019 வரை தினசரி நாளிதழ்கள் தினகரன், தினத்தந்தி, தினமலர் மற்றும் தினமணி ஆகிய நாளிதழ்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.6000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி 10/2018 மற்றும் 11/2018 மாத நாளிதழ் செலவினத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 0328 /2018 /சி4**

1348) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி) வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட்ட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்க சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து சல்டானா ரோடு பகுதியில் உள்ள புனித லூர்து அன்னை நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி கட்டிடத்திற்கு சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து ஆணையர், பொள்ளாச்சி நகராட்சியை 3ம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு WMP எண்.35805/2018ல் வழக்கு தொடரப்பட்டு இடைக்கால உத்திரவு பெறப்பட்டுள்ளதால் இவ்வழக்கினை நகராட்சியின் சார்பாக திரு.ஆனந்த், வழக்கறிஞர் மூலம் நடத்திடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 6432 /2018 /அ1**

**1349)** நகராட்சிக்கு சொந்தமான காந்தி தினசரி சந்தை சாலையில் போக்குவரத்து மற்றும் பொது மக்கள் நலன் கருதி சாலையின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி புதிய தார் சாலை அமைக்கப்பட உள்ளதால், சந்தை சாலை (மார்க்கெட் ரோடு) நுழைவு பகுதியின் ஓரத்தில் உள்ள கழிப்பிடம் அதனை ஒட்டி உள்ள காலியிடமும் சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படுவதால் 'சி பிளாக்' கட்டண கழிப்பிடத்தை குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்யவும், அருகில் உள்ள 15X10 அளவு இரண்டு காலியிட குத்தகையை (வரிவிதிப்பு எண் 295, 296) ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. உதவி பொறியரின் 11.12.2018ந் தேதிய குறிப்பில் சாலை விரிவாக்கத்திற்காக குத்தகை இனத்திலிருந்து 'சி' பிளாக் கட்டணக் கழிப்பிடம் மற்றும் அருகில் உள்ள 15X10 அளவு இரண்டு காலியிட குத்தகையை (வரிவிதிப்பு எண் 295, 296) ரத்து செய்ய மன்ற அனுமதிக்கலாம்

**ந.க.எண். 5674 /2018 /அ6**

**1350)** பொது சுகாதாரப்பிரிவு வாகன எண்.TN41 AM 4893 (Compactor)ல் கிளட்ச் அசெம்பிள் யூனிட் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.45,000/— மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி பணிகளை உடன் மேற்கொள்ளலாம்.
3. திருவாளர்கள் T.V.S. சுந்தரம் 'பி' லிமிடெட் அவர்கள் வாகன தயாரிப்பாளரின் அங்கீகாரம் பெற்ற பணிமனை என்பதால் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி செய்யலாம்.

**ந.க.எண். 6705 /2018 /எச்2**

**1351)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் 12 நபர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள 27.12.2018ம் நாள் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | அருணை கம்ப்யூட்டர் பார்மஸ்,<br>22, பிள்ளையார் கோவில் வீதி<br>புதூர் – 635752<br>வாணியம்பாடி (மா.வ) | ரூ.475/— |
| 2 | சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ்<br>பொட்டவிளை, கூட்டமாவு மூலகுசூடு – 629167<br>கன்னியாகுமரி (மா.வ) | ரூ.465/— |

எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவு தொகை ரூ.5,00,000/—க்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.
3. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**1352)** நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்தியப் பேருந்து (கூடுதல்) நிலைய முதல் தள கடைகளுக்கு 29.5.15, 24.7.15. 22.2.2017, 8.3.2017, 24.3.2017, 26.4.2017, 25.5.2017, 9.6.2017,13.7.2017,

09.08.2017, 19.09.2017, 25.10.2017, 23.11.2017. 23.12.2017, 31.01.2018, 28.02.2018, 23.03.2018, 24.04.2018, 31.05.2018, 28.06.2018,26.07.2018,28.08.2018 மற்றும் 06.12.2018 தேதிகளில் கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தக் கேள்வி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

| இனம் | பெயர்/முகவரி | உயர்ந்தபட்ச ஏலம் / ஒபபந்தப்புள்ளி |
|---|---|---|
| அண்ணா மத்தியப் பேருந்து (கூடுதல்) முதல் தள கடை எண்.7 | R.சதீஸ்குமார்<br>4/125– தேவர் கோவில் வீதி<br>ஒண்டிப்புதூர் (வழி)<br>கோவை – 641016 | ரூ.1500/– மாதம் 1க்கு |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தக் கேள்வியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 8434 /2018 /அ6**

1353) பொள்ளாச்சி நகராட்சியில் CTC மேடு தில்லை நகர் பகுதியில் உள்ள நுண்ணுயிரி உரமாக்கும் மையம் (PLASTIC SEGREGATION SHED) கட்டிடத்தில், ஆணையாளர் பெயரில் உள்ள மின் இணைப்பு எண்.390–008–1236 ஒரு முனை மின் இணைப்பை மும்முனை மின் இணைப்பாக மாற்றம் செய்யவும், அதற்கு கட்டணமாக ரூ.10389/– யை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மின்கழகத்திற்கு தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4938 /2018 /இ1**

1354) பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் 40 KVAR மின் சேமிப்பு கலன் (Capacitor) புதுப்பித்தல் பணிக்கு ரூ.0.25இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்:கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு |
| 2 | திருவாளர்கள்: ராமு ரீவைண்டிங் ஒர்க், உடுமலைப்பேட்டை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.44% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. மேற்காண் பணி குடிநீர் விநியோக பணியாக இருப்பதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 6158 /2018 /இ1**

1355) பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் பொது மக்களுக்கு வழங்கும் குடிநீரில்

உபயோகப்படுத்தப்படும் திரவ குளோரின் வாயு, Hypo Liquid Clorine மற்றும் பிளீச்சிங் பவுடர் ஒரு வருட காலத்திற்கு விநியோகம் செய்தல் பணிக்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 13.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

**1. மின்னணு முறையில் (Online) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்:–**

| | | |
|---|---|---|
| 1. | M/s. Sri Senthur Murugan Chem Tech<br>7/9-1, Mettukadu,<br>Vellagoundampalayam,<br>Puduchatram Post<br>Namakkal-637018 | மதிப்பீட்டு விலையை விட ரூ.23,000/– குறைவு |

**நேரடியாக ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் (Offline) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்:–**

| | | |
|---|---|---|
| 1 | M/s. Garuda Utility Solution<br>66 A, P.S.Puram,<br>Srinivasapuram, Thanjavur -9 | மதிப்பீட்டு விலையை விட ரூ.33,600 /– குறைவு |
| 2 | M/s. Sri Krishna Chemicals<br>227,1,Pollachi Main Road<br>Eachanari,Coimbatore-641 021 | மதிப்பீட்டு விலையை விட ரூ.58,640/– குறைவு |

மேற்காணும் பணிக்கு மின்னணு முறையில் **(Online)** ஒரு ஒப்பந்தப்புள்ளியும் நேரடி **(Offline)** முறையில் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வரப்பெற்றுள்ளன. ஆக மொத்தம் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளை திறந்து ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில் மதிப்பீட்டு விலையை விட ரூ.58,640/– குறைவானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளிகளை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Sri Krishna Chemicals, Coimbatore-21 அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. மேற்காண் பணி குடிநீர் விநியோக பணியாக இருப்பதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முதல் அழைப்பா வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையை விட ரூ.58,640/– குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Sri Krishna Chemicals, Coimbatore-21, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 0568 /2018 /இ2**

**1356)** நகராட்சிக்குச் சொந்தமாக கோட்டூர் வழி நகர்மன்ற நடுநிலைப்பள்ளி தெப்பக்குளத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளி வளாகத்தில் வடக்குப் பார்த்த கட்டிடம் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதால் படிக்கட்டு மேற்கூரை உடைந்து பழுதடைந்துள்ளது. இதனால் மழைக் காலங்களில் மேலே விழும் மழை நீர் கட்டிட சுவறுகள் வழியே செல்கின்றன. இதனால் பக்கச்சுவர்கள் பழுதாகும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு, பழுதடைந்த மேற்கூரையை அகற்றி விட்டு புதிதாக அமைக்க வேண்டியுள்ளது. மேலும் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதால் பழுதடைந்தும் மோசமான நிலையுள்ளது. கழிப்பிடத்தின் உயரம் குறைவாக உள்ளதால், வெளியாட்கள் உள்ளே புகுந்து அசுத்தம் செய்து விடுகிறார்கள். இதனாலும் படிக்கும் மாணவ மாணவியர்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.

எனவே படிக்கும் மாணவ மாணவியர்கள் நலன் கருதி, மேற்காணும் பணிகளை மேற்கொண்டு புதுப்பிக்க ரூ.3.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டினை கல்வி நிதியால் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

1357) பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் செல்வபுரம், குமாரசாமி லே அவுட், MKK என்கிளேவ், மற்றும் சபரி அருள் நகர் ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்களில் கம்பி வேலியுடன் பெயர்ப்பலகை அமைத்தல் பணிக்கு ரூ.18.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு 13.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவு |
| 2 | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.56% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண். 1217 நாள். 02.11.2018 –ல் ரூ.18.30 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.16% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 6256 /2018 /இ1**

1358) பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் கணபதி கார்டன், ஜெய்கிருஷ்ணா நகர், மாதா அமிர்தானந்தா நகர் மற்றும் VND நகர்ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்களில் கம்பி வேலியுடன் பெயர்ப்பலகை அமைத்தல் பணிக்கு ரூ.14.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 13.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% குறைவு |
| 2 | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.56% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண். 1219 நாள். 02.11.2018 –ல் ரூ.14.90 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.15% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 6257 /2018 /இ1**

1359) பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நிரஞ்சன் கார்டன், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி நகர், ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்களில் கம்பி வேலியுடன் பெயர்ப்பலகை அமைத்தல் பணிக்கு ரூ.9.80இலட்சம் மதிப்பீட்டிற்கு 13.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற

ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு |
| 2 | திருவாளர்கள்.கே.ஆர்.காளிதாஸ் அன் கோ, | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.50% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண். 1220 நாள். 02.11.2018 –ல் ரூ.9.80 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 6255 /2018 /இ1**

**1360)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் ஓம் சக்தி நகர், கணபதி நகர், ஸ்ரீமன் நாராயணன் நகர் ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்களில் கம்பி வேலியுடன் பெயர்ப்பலகை அமைத்தல் பணிக்கு ரூ.16.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 13.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு |
| 2 | திருவாளர்கள்: ஆர்த்தி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.89% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண். 1218 நாள். 02.11.2018 –ல் ரூ.16.90 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம்,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 6258 /2018 /இ1**

**1361)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்ட பணிகள் மூலம் ஏற்படும் குடிநீர் குழாய் உடைப்புகளை சரி செய்தல் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 13.12.2018 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்: எஸ்.கே.கன்ஸ்ட்ரக்சன்ஸ், | மதிப்பீட்டு விலை விகிதத்தை |

| | | |
|---|---|---|
| | பொள்ளாச்சி. | விட 0.17% குறைவு |
| 2 | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.78% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: எஸ்.கே.கன்ஸ்ட்ரக்சன்ஸ், பொள்ளாச்சி.அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண். 1224 நாள். 02.11.2018 –ல் ரூ.5.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.17% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: எஸ்.கே.கன்ஸ்ட்ரக்சன்ஸ், பொள்ளாச்சி.அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 5585 /2018 /இ1**

**1362)** நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் தொடர்பாக பெறப்பட்ட அரசாணை (நிலை) எண்.126, நாள் 28.11.2018 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 6364 /2018 /இ1**

**1363)** பொள்ளாச்சி நகராட்சி, கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள சிறப்பு நிலை நகராட்சி ஆகும். 1920–ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, படிப்படியாக வளர்ந்து 1983 ஆம் ஆண்டில் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சிறப்பு நிலை நகராட்சியாக உள்ளதால் அதற்கு ஏற்ற வகையில் நகராட்சி ஆணையர் பதவி சிறப்பு நிலையாகவும், சிறப்பு நிலை மேலாளர், முதுநிலை நகரமைப்பு அலுவலர், வருவாய் அலுவலர் மற்றும் ஆணையரின் நேர்முக உதவியாளர் பணியிடங்கள் தேற்றுவிக்கப்பட்டு, பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். நகராட்சிப் பொறியாளர் பணியிடம் மட்டும் நிலை II பணியிடமாக தற்போது உள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.4314/UP1/2018 நாள்.14.10.2008ல் குறிப்பிட்ட பணியிட அளவுகோல் பட்டியலில் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் பணியிடங்களில், பொறியாளர் பதவி செயற்பொறியாளர் நிலைக்கு உயர்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வழக்கமாக, நகராட்சிகளில் பணிபுரியும் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளம் பொறியாளர்களால் ஒவ்வொரு நகராட்சிகயிலும், அன்றாட பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்க பராமரிப்பு மற்றும் நகராட்சிகளில் பொதுப்பணி வேலைகளான சாலைகள், வடிகால் கட்டிடங்களின் பராமரிப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

தற்பொழுது, அரசு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தி வரும் சிற்பபு திட்டப் பணிகளில் சாலைகள், குடிநீர், வடிகால், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் பொறியாளர் பிரிவில் அதிக அளவில் செயலாக்கம் செய்யப்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக அரசு பல்வேறு தலைப்புகளில் அதிக அளவில் நகராட்சிக்கு நிதி ஒதுக்கி, திட்டப் பணிகளை விரைவாகவும். சிறப்பாகவும் செயல்படுத்தி வருவதால் நகராட்சிப் பொறியர் பிரிவில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் போதுமானதாக இல்லாத நிலையும் உள்ளது.

பொறியியல் பிரிவில் அன்றாடப்பணிகள் மற்றும் திட்டப் பணிகளை அரசு மற்றும் உயர் அலுவலர்களின் வழிகாட்டுதலுக்கு இணங்க விரைவாகவும், சிறப்பாகவும் செயல்படுத்த பணியிடங்கள் அனுமதி மற்றும் பணியிட அளவுகோல் குறித்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில்

சிறப்பு நிலை நகராட்சிக்கு செயற்பொறியாளர் நிலை–2 பணியிடம் 1–ம் பணிக்குறியீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டுவரும் இந்நகராட்சிக்கு தற்போது உள்ள நகராட்சி பொறியாளர் நிலை II பணியிடத்தை நகராட்சிப் பொறியாளர் நிலை –1 (செயற்பொறியாளர்) நிலை–1 ஆக தரம் உயர்த்தி (Upgradation) தர நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 5856 /2018 /இ1**

**1364)** பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் விநியோகத்தில் தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலையம், 9 எண்ணம் நீர் தேக்க வளாகங்கள் மற்றும் இயற்கை உயிரி எரிவாயு கலன் வளாகத்தில் காவல் பணிபுரிய தேவையான பணியாளர்கள் தற்சமயம் போதிய அளவில் இல்லாத காரணத்தால், மேற்காண் இடங்களில் காவல் பணிகள் புரிய தேவையான காவலர் பணியாளர்களை அவுட்சோர்சிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி அமர்த்த வேண்டியுள்ளது. மேற்காண் இடங்களில் 12 மணிநேர பணிக்கு ஒருவர் வீதம் 12 இடங்களில் காவல் பணிபுரிய 24 நபர்கள் (காவலாளிகள்) தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை அவர்களின் செயல்முறை ஆணைப்படி (ந.க.எண்.7979/2017/இ3, நாள்–29.07.2017) நிர்ணயம் செய்யப்பட்ட கூலியுடன் ESI, EFF, Insurance மற்றும் Service Tax உடன் 18.02.2019 முதல் 17.05.2019 வரையிலான 89 நாட்களுக்கு வழங்க உத்தேசமாக ரூ.9,50,000/– செலவு ஆகும் மேற்காண் இடங்களில் அவுட்சோர்சிங் முறையில் ஒடப்பந்தப்புள்ளி கோரி காவலர் பணியாளர்களை அமர்த்தவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.9,50,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண். 2316 /2017 /இ1**

**1365)** பொள்ளாச்சி நகராட்சியில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் பயன்படுத்தப்பட்டுவரும் E-Tender உபயோகத்திற்கு தேவைப்படும் DSC Card நகராட்சி பொறியாளர் மற்றும் மின்கண்காணிப்பாளர் பெயரில் உள்ளது. இந்த இரு கார்டுகளும் வருகிற 10.01.2019 தேதியுடன் காலாவதியாகிறது. எனவே குறித்த காலத்திற்குள் புதுப்பிக்க பட வேண்டியுள்ளது. அத்துடன் கூடுதலாக AE மற்றும் JE அவர்கள் பெயரில் புதிதாக DSC Card வாங்கப்பட்டால் பணிகளை சுணக்கமின்றி செய்ய ஏதுவாக இருக்கும். இது தொடர்பாக DSC Card E-Token சேவை வழங்கும் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி இத்துடன் பார்வைக்கும் தக்க ஒப்புதலுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | பதவி | E-Taken தன்மை | செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.முருகேசன் | ME | Renewal | 1600 |
| 2 | திரு. முத்துராஜ் | ES | Renewal | 1600 |
| 3 | திரு.சாந்தகுமார் | JE | New Card | 2600 |
| 4 | திரு.திலீபன் | AE | New Card | 2600 |
| | | | | 8400 |

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ரூ.8400/–க்கு தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று M/S DIGITAL IDENTITY நிறுவனத்திற்கு செலுத்த தக்க வகையில் DD எடுத்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் அனுப்பி DSC Card With E-Token பெற்று பணிகளை செய்து கொள்ள மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

1366) நகராட்சிக்குச் சொந்தமான R.K. நகரில் நகர்மன்ற பள்ளிக் கட்டிடம் செயல்பட்டு வருகிறது. இவ்வளாகத்தில் அமைத்த தெற்குப்பார்த்த கட்டிடம் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதால் பழுதடைந்தும் பொழிவு இழந்த நிலையிலுள்ளது. மேலும் இவ்வளாகத்தில் வடக்குப் பார்த்த கட்டிடத்தின் முதல் தளத்தில் மூன்று வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் புதியதாக கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடமும் பொழிவு பெறும் வகையில் வர்ணம் பூச வேண்டியுள்ளது.

எனவே, பழைய கட்டிடத்தில் மராமத்துப் பணி மேற்கொண்டு புதுப்பிக்கவும், மற்றும் புதிய கட்டிடத்திற்கு வர்ணம் பூசவும் ரூ.4.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டினை கல்வி நிதியால் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

1367) பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மகாலிங்கபுரம் மெயின் சாலை மற்றும் பல்லடம் மெயின் சாலை சந்திப்பில் உள்ள குடிநீர் மெயின் குழாயின் சூலிஸ் வால்வு தொட்டி புதுப்பித்து கட்டுதல் மற்றும் நால்வர் மடம் சந்திப்பில் உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு Chamber குழி அமைத்து அதன் மீது சிமெண்ட் சிலேப் கற்கள் அமைத்தல் பணிக்கு ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு 04.01.2019 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு. கே.ராமசாமி பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.31% குறைவு |
| 2 | திருவாளர்கள். கே.ஆர்.காளிதாஸ் அன் கோ, பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.57% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.31% குறைவானதா மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.ராமசாமி பொள்ச அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. மேற்காண் பணி குடிநீர் விநியோக பணியாக இருப்பதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.31% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.ராமசாமி பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 6530 /2018 /இ1**

1368) பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சியில் 5 இடங்களில் நிறுவப்படும் தானியங்கி குடிநீர் மையங்களுக்கு மின் இணைப்பு வசதிகள் செய்தல் பணிக்கு ரூ.2.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு 04.01.2019 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.32% குறைவு |
| 2 | திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.95% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.32% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. மேற்காண் பணி குடிநீர் விநியோக பணியாக இருப்பதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.32% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 5276 /2018 /இ1**

1369) பொள்ளாச்சி நகராட்சியின் அண்ணா பழைய பேருந்து நிலையத்தின் கோவை பேருந்துகள் வெளியே செல்லும் நுழைவாயின் மேற்குப்புறம் அமைந்துள்ள வடிகாலின் மீது சாய்வுதளம் Precast Slab மூலம் அமைத்திட வேண்டியுள்ளது. சாய்வுதளம் அமைப்பதற்கான உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.1.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 0038 /2019 /இ1**